மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா ரொம்ப நீண்டு கொண்டே போகிறதே என்றுதான் பார்க்கிறேன், வேறொன்று மில்லை.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குள்,——இரண்டு மாதங்கள் என்று அமைச்சர் வைத்தால் நிச்சயமாக வரும். எனக்குத் தெரியும், ஆகவே, இப்பொழுது இரண்டு மாத காலத்திற்குள்ளாக அந்த ஆய்வுப் பணி முடிவுற்று இங்கே கோப்புகள் வாரியத்திற்கு அல்லது அரசுக்கு வரும் என்று உத்தரவாதத்தை அமைச்சர் கேட்டால் நிச்சயமாக வரும்.—அதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, முதலிலேயே இதற்கான பதிலைச் சொல்லிவிட்டேன்.

எரிசாராய ஆலையின் கழிவுநீர்

165—(*வினா எண். 993) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, செந்தண்ணீர்புரத்தில் இருக்கும் திருச்சி எரிசாராய ஆலையிலிருந்து வரும் கழிவு நீர் சுத்தப்படுத்தப் படாமல் உய்யக்கொண்டான் வாய்க்காலில் விடப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) இத்தொழிற்சாலையின் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே உய்யக்கொண்டான் வாய்க்காலில் விடப்படுகின்றது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. ஏனென்று சொன்னால், இன்றைக்கும் கழிவு நீர் விடப்பட்டு, உய்யக்கொண்டான் வாய்க்கால், இன்றைக்கு நேற்று அல்ல, 14 வருடங்களாகப் பாசனத்திற்கோ, குடி தண்ணீருக்கோ, குளிப்பதற்கோ பயன்படாமல் இருக்கிறது.

1989 மே 5]

சமீபத்தில் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே விஜயம் செய்து பார்த்திருக்கிறார்கள். ஆகவே இதை சீக்கிர மாக முறைப்படுத்தி கழிவு நீர் விடாமல் சுத்திகரிப்பு கருவி களைக் கொண்டு நடவடிக்கையெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை நான் திருச்சி சென்றிருந்தபோது நேரில் சென்று பார்த்தேன். உய்யகொண்டான் வாய்க்காலில் சாதாரணமான முறையில் அதி லிருந்த கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு அதில் சேர்ப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அது மேலும் காற்றி னையும் மாசுபடுத்தக்கூடியதாக இருந்த காரணத்தால் அங்கே இரண்டு கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய நிறுவனம் உருவாக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, அது கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அது இன்னும் முழுமை யாகப் பணியாற்றத் துவங்கவில்லை. மாசுக் கட்டுப்பாடு வாரி யம் அதை நேரில் பார்வையிட்டு இன்னும் மூன்று மாத காலம் காலக்கெடுவை அளித்து இருக்கிறது. 31–7–1989-க்குள் அந்தப் பணியை நடைமுறைப்படுத்தி அந்தக் கழிவு நீர் சுத்தி கரிக்கப்பட வேண்டுமென்று இறுதியாக எச்சரிக்கையும் கொடுத் திருக்கிறது. அந்த காலகட்டத்திற்குள் அதை சரியாகச் செய்யாவிட்டால் இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என் பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர் களே, சமீபத்தில் கூட நானும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் சென்று அதைப் பார்வையிட்டோம். ஆகவே, சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்படுகிறது. மக்களுக்கு அதனால் பாதிப்பு ஏற்படுகிறது. மெஷின் வாங்கி ஏறத்தாழ நான்கு வருடங்களாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல குறிப்பிட்ட மூன்று மாதங்களில் அதனை கறாராக முடிப்பதற்கு அரசு உறுதியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எடுத்திருக்கிறோம் என்று ஏற்கெனவே கூறியிருக்கிறேன்,